<u>உசிலம்பட்டி நகராட்சி மன்றம்</u>

<u>நகர்மன்ற சாதாரணக்கூட்டம்</u>

<u>நாள். 30.05.2023 செவ்வாய்க்கிழமை நேரம் – காலை 11.00 மணி</u>

---

## 28.04.2023–ஆம் தேதிய நகர்மன்ற கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட மன்ற கூட்டப்பொருள்

<u>மன்றப்பொருள்–1</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.எண். 35945/2022/EA2, நாள். 10.01.2023–இன்படி உசிலம்பட்டி நகராட்சிக்கு ரூ. 204.14/– இலட்சம் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் மூலம் செயல்படுத்த சேவை வழங்குநர் / முகவர் / மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுதனை தொடர்ந்து 24.03.2023–இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு செய்ததில் பணிகளை மேற்கொள்வதற்கான தொழில்நுட்ப மற்றும் விலை விகித ஆவணங்கள் ஒப்பந்த விதிகளின்படி தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளியாக M/s. Ram & Co., K.Pudur, Surya Nagar, Madurai என்பவரது ஒப்பந்தப்புள்ளி தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்ததாரருக்கு சம்மத கடிதம் வழங்கி தொகை செலுத்தியபின்பு வேலை உத்தரவு வழங்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2255/2023/இ1)

**தீர்மானம் எண்.417**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–2</u>

உசிலம்பட்டி நகராட்சி வார்டு–6, சத்யா நகர் 4–வது தெரு பகுதி மேடும் பள்ளமுமாக இருப்பதால் பொதுமக்கள் நடந்து செல்வதற்கும், வண்டி வாகனங்கள் செல்வதற்கும் மிகவும் சிரமமாக இருப்பதாக அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்ததன் அடிப்படையில் மேற்படி இடத்தில் கிராவல் அடித்து சமன்படுத்தும் பணியினை ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). பணியின் அவசர அவசியம் கருதி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 941/2023/இ1)

**தீர்மானம் எண்.418**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–3</u>

உசிலம்பட்டி நகராட்சி வார்டு–19, ஆனந்தா நகர் 3 மற்றும் 4–வது தெரு பகுதிகளில் தண்ணீர் வசதி இல்லாத காரணத்தினால், அப்பகுதி பொதுமக்கள் சிரமப்பட்டு வருகின்றனர். தற்போது, கோடை காலமாக இருப்பதால், தண்ணீருக்காக அப்பகுதி மக்கள் சிரமப்பட்டு வருகின்றனர். எனவே, அப்பகுதி பொதுமக்களின் கோரிக்கைக்கிணங்க ஆனந்தா நகர் 3–

வது மற்றும் 4-வது தெரு பகுதிகளை சேர்த்து ஒரு போர்வெல் அமைத்து தரும் பணியினை ரூ.3.00/- இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). பொதுநிதி இருப்பினை கருத்தில் கொண்டு பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 945/2023/இ1)

**தீர்மானம் எண்.419**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்-4</u>**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு-1, இருளாயி டிரஸ்ட் பகுதியில் சலவை தொழிலாளர்கள் அதிகம் உள்ளனர். இதன் காரணத்தினால் சலவை கூடத்தொட்டி பழுதடைந்துள்ளதால் சலவைத் தொழிலாளர்களின் கோரிக்கைக்கிணங்க அப்பகுதியில் உள்ள சலவைக்கூடத்திற்கு சுற்றுச்சுவர் கட்டி கொடுக்குமாறு மற்றும் சலவைக்கூடத்தொட்டியினை பராமரிப்பு செய்யும் பணியினை ரூ. 3.50/- இலட்சம் மதிப்பீட்டினை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). பணியின் அவசர அவசியம் கருதி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 944/2023/இ1)

**தீர்மானம் எண்.420**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்-5</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 18274/2022/CFC-1, நாள். 21.03.2023 கடிதத்தில் 15-வது மத்திய நிதிக்குழு பரிந்துரையின் பேரிலான பிணை (Tied Grant) மானிய திட்டத்தின்கீழ் உசிலம்பட்டி நகராட்சியில் 9 எண்ணம் BOV வண்டிகள் ரூ. 18.00/- இலட்சம் மற்றும் 2 எண்ணம் LCV ரூ. 14.60/- இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்திட அனுமதியளிக்கப்பட்டு 26.04.2023-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு செய்ததில் பணிகளை மேற்கொள்வதற்கான தொழில்நுட்ப மற்றும் விலைவிகித ஆவணங்கள் ஒப்பந்த விதிகளின்படி தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளியாக BOV வாகனம் கொள்முதல் செய்வதற்கு வலம்புரி இன்டஸ்ட்ரீஸ் மற்றும் LCV வாகனம் கொள்முதல் செய்வதற்கு ஸ்ரீ கற்பகமூர்த்தி காரைக்குடி என்பவரது தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்ததாரருக்கு சம்மத கடிதம் வழங்கி மதிப்பீட்டில் 1% தொகை செலுத்திய பின்பு வேலை உத்தரவு வழங்கிட நகர்மன்ற முன் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று LOA வழங்கியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 1234/2022/இ1)

**தீர்மானம் எண்.421**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–6</u>

உசிலம்பட்டி நகராட்சியில் 15–வது நிதிக்குழு பினண மான்ய திட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பொதுச்சுகாதார பணிக்கு ரூ. 14.60 இலட்சத்திற்கு 26.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | பொதுச்சுகாதார பணிக்கு 2 எண்ணம் LCV (Light Commercial Vehicle) வாகனங்கள் விநியோகம் செய்யும் பணி | ரூ. 14.60 | ஸ்ரீ கற்பகமூர்த்தி காரைக்குடி | 2.27% குறைவு |
| | | | M/s. ABT Industries Coimbatore | மதிப்பீட்டு விலை |

மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ கற்பகமூர்த்தி, காரைக்குடி கன்ஸ்ட்ரக்சன் ஒப்பந்ததாரர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). மேற்படி பணிக்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 1342/2022/இ1)

**தீர்மானம் எண்.422**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–7</u>

உசிலம்பட்டி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2022–23 பொதுநிதியில் ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் மூலம் செயல்படுத்த ஒப்பந்ததாரர் தேர்வு செய்யும் பணிக்கான விளம்பர கட்டணம் பட்டியல் எண். 1838/2022–23, நாள். 08.02.2023–இன்படி ரூ. 22,954/– மட்டும் (ரூபாய் இருபத்து இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து நான்கு மட்டும்) Bright Advertising, Chennai–க்கு செலுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 2255/2020/இ1)

**தீர்மானம் எண்.423**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–8**

உசிலம்பட்டி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2022–2023–இன்கீழ் மண் சாலைகளை தார்ச்சாலைகளாக மாற்றியமைத்திடும் பணிக்காக தேர்வு செய்யப்பட்ட வார்டு எண்.01, மாமரத்துப்பட்டி மேற்கு 4–வது தெரு, வார்டு–16–இல் கே.பி.எம். குப்பாஞ்செட்டியார் தெரு, ஜே.பி.ஆர். மஹால் 2–வது தெரு, கே.பி.எம். குப்பாஞ்செட்டியார் 2–வது தெரு (119016R156) ஜே.பி.ஆர். மஹால் 4–வது தெரு, வார்டு எண்.21, குமரன் ஆஸ்பத்திரி தெரு, வார்டு–20 அநுக்கிரஹம் மஹால் தெரு மற்றும் வார்டு–22 மீனம்மாள் நகர் மெயின் ரோடு, 5–வது தெரு பகுதிகளில் சாலை அமைக்க இயலாமல் மேடும் பள்ளமுமாக இருப்பதால் மேற்படி தெரு பகுதிகளில் கிராவல் அடித்து சமன்படுத்தி சாலைகள் அமைக்கும் பணியினை ரூ. 3.50/– இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 952/2023/இ1)

**தீர்மானம் எண்.424**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–9**

உசிலம்பட்டி நகராட்சியில் 15–வது நிதிக்குழு பினண மான்ய திட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பொதுச்சுகாதார பணிக்கு ரூ. 18.00/– இலட்சத்திற்கு 26.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | பொதுச்சுகாதார பணிக்கு 9 எண்ணம் BOV ( Battery Operated Vehicle) வாகனங்கள் விநியோகம் செய்யும் பணி | ரூ. 18.00 | வலம்புரி கோயம்புத்தூர் | 5.01% மிக குறைவு |
| | | | M/s. என்.ஏ.சி. இன்டஸ்ட்ரீஸ் | 0.80% அதிகம் |
| | | | M/s. பிரியம் இன்டஸ்ட்ரீஸ் | 2.93% குறைவு |

மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியில் மிக குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள வலம்புரி கோயம்புத்தூர் ஒப்பந்ததாரர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). மேற்படி பணிக்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1342/2022/இ1)

**தீர்மானம் எண்.425**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>மன்றப்பொருள்–10</u>**

வார்டு–10 கண்ணன் தியேட்டர் எதிர்புறம் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | வார்டு–10 கண்ணன் தியேட்டர் எதிர்புறம் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி | ரூ. 5.00 | கே.பி.கே. கன்ஸ்ட்ரக்சன் | 0.13% குறைவு |
| | | | நந்தினி கன்ஸ்ட்ரக்சன் | 1.24% அதிகம் |

மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள கே.பி.கே. கன்ஸ்ட்ரக்சன் ஒப்பந்ததாரர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). மேற்படி பணிக்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1342/2022/இ1)

**தீர்மானம் எண்.426**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–11</u>**

உசிலம்பட்டி நகராட்சி 1 முதல் 24 வரை உள்ள வார்டுகளில் நகராட்சிக்குச் சொந்தமான 125 எண்ணம் சிறுவிசை பம்பு மூலம் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட 125 எண்ணம் சிறுமின் விசை பம்புகளில் அவ்வபோது ஏற்படும் மோட்டார் பழுது சரி செய்து பொதுமக்கள் தடையில்லா குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால் மேற்படி பழுது நீக்கம் செய்யவும் பணிகளை வருடாந்திர பராமரிப்பு பணிகளாக ரூ. 9.80/– இலட்சம் (ரூபாய் ஒன்பது இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 950/2023/இ1)

**தீர்மானம் எண்.427**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–12</u>**

உசிலம்பட்டி நகராட்சி பகுதியில் மொத்த மக்கள் தொகை 35219 ஆகும். நகராட்சியின் குடிநீர் ஆதாராமாக விளங்கும் எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் (Own Source) இருந்து பொது மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதிக்கு ஒரு நாள் ஒன்றிற்கு ஒரு நபர் ஒன்றிற்கு 90 LPCD வீதம் தேவைப்படும் மொத்த குடிநீரின் அளவு 3.17 MLD ஆகும். இந்நகராட்சி பகுதிக்கு உள்ளூர்

குடிநீர் ஆதாரமான அணைப்பட்டி–எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலைய குடிநீர் திட்டத்தின் மூலம் நாள் ஒன்றிற்கு 1.20 MLD மற்றும் ஆண்டிபட்டி–சேடபட்டி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் 1.50 MLD குடிநீர் பெறுவதற்கு வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது. இந்நகராட்சிக்குச் சொந்தமான எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் உசிலம்பட்டி நகர் பகுதியிலிருந்து 23.5 கி.மீ. தொலைவில் உள்ளது. எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து 100 எச்.பி. மோட்டார் மூலம் குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு 24 வார்டுகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பம்பிங் மெயின் அமைக்கப்பட்டுள்ள DIமற்றும் AC பைப்புகள் அவ்வப்போது பழுது ஏற்பட்டு குடிநீர் வழங்குவதில் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, மேற்படி பழுது நீக்கம் செய்யும் பணிகளை வருடாந்திர பராமரிப்பு பணிகளாக ரூ. 9.80/– இலட்சம் (ரூபாய் ஒன்பது இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 949/2023/இ1)

**தீர்மானம் எண்.428**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–13**

உசிலம்பட்டி நகராட்சி பகுதியின் மொத்த மக்கள் தொகை 35219 ஆகும். நகராட்சியின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் (Own Source) இருந்து பொது மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதிக்கு ஒரு நாள் ஒன்றிற்கு ஒரு நபர் ஒன்றிற்கு 90 LPCD வீதம் தேவைப்படும் மொத்த குடிநீரின் அளவு 3.17 MLD ஆகும். இந்நகராட்சி பகுதிக்கு உள்ளூர் குடிநீர் ஆதாரமான அணைப்பட்டி–எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலைய குடிநீர் திட்டத்தின் மூலம் நாள் ஒன்றிற்கு 1.20 MLD மற்றும் ஆண்டிபட்டி–சேடபட்டி குடிநீர் திட்டத்தின் மூலம் 1.50 MLD குடிநீர் பெறுவதற்கு வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட குடிநீர் ஆதாரங்கள் மூலம் குடிநீர் பெறப்பட்டு 1 முதல் 24 வார்டுகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகம் செய்யப்படும் போது பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் வால்வு பழுது நீக்கங்களை உடனுக்குடன் சரி செய்து பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்யும் பணிகளை வருடாந்திர பராமரிப்பு பணிகளாக ரூ. 9.80/– இலட்சம் (ரூபாய் ஒன்பது இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 951/2023/இ1)

**தீர்மானம் எண்.429**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–14**

இந்நகராட்சி சார்பாக தமிழக அரசின் இரண்டு ஆண்டுகள் சாதனைகள் விளம்பரம் செய்வதற்கு நகரின் முக்கிய இடங்களில் 8 பகுதிகளில் விளம்பரப்பலகைகள் வைத்து விளம்பரம் செய்யப்பட்டது. அதற்கான 8 பேனர்கள் அச்சடித்த செலவினம் மற்றும்

பணியாட்கள் கூலி மற்றும் வாடகை உள்ளிட்ட செலவினங்களுக்கு வழங்க வேண்டிய தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

8 பேனர்கள் அச்சடிக்கப்பட்ட செலவினம் – ரூ. 9000

கட்டும் கூலி மற்றும் மர வாடகை செலவினம் – ரூ. 34500

**அலுவலகக்குறிப்பு**

மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1122/2018/பி1)

**தீர்மானம் எண்.430**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–15**

இந்நகராட்சியின் ஒப்பந்தப்பட்டியலில் பிடித்தம் GST வரியினை உரிய ஒப்பந்ததாரர் பெயரில் மாதந்தோறும் GSTR–7 பதிவேற்றம் செய்யப்பட்டமைக்கு பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் 2023 ஆகிய மூன்று மாதங்களுக்கு வழங்க வேண்டிய தொகை ரூ. 8,000/– மட்டும் RIFA TAX Consultancy நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், இச்செலவினம் மாதந்தோறும் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் 2022–2023–ஆம் நிதி ஆண்டிற்கு தேவையான உத்தேச செலவினம் ரூ. 30,000/–க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). அரசுக்கு வரி செலுத்த வேண்டியதன் முக்கியத்துவம் கருதி செலவினம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 10990/2019/பி1)

**தீர்மானம் எண்.431**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–16**

இந்நகராட்சி வருவாய் மூலதனநிதி மற்றும் குடிநீர் வழங்கல் நிதிகளுக்கு 2021–2022–ஆம் நிதி ஆண்டிற்கு தணிக்கை அறிக்கை பத்திகள் தட்டச்சு செய்தமைக்குரிய செலவினம் ரூ. 10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) திரு. M.S. நந்தகுமார், தட்டச்சர், மண்டல இணை இயக்குநர் அலுவலகம் அவர்களுக்கு வழங்கவும், மேலும், 2021–2022–ஆம் நிதி ஆண்டின் தணிக்கை அறிக்கை தட்டச்சு செய்து புக் பைண்டிங் செலவினம் மற்றும் 5 எண்ணம் புக் பைண்டிங் செய்த செலவினம் ரூ. 13494/– (8500+4994) முருகன் ஸ்டோர் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). மேற்படி தணிக்கைக்கு தொகை செலுத்த வேண்டியதன் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 2426/2023/பி1)

**தீர்மானம் எண்.432**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–17**

இந்நகராட்சி அலுவலகத்திற்கு தேவையான மேஜை மற்றும் நாற்காலிகள் கொள்முதல் செய்வதற்கு இந்நகராட்சி அலுவலக பணியாளர்களின் கோரிக்கை பட்டியலின்படி கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 7.00 இலட்சம் ஆகும். மேலும், இந்நகர்மன்ற தீர்மானம் எண்.240, நாள். 30.12.2022–இல் அனுமதிக்கப்பட்ட தொகை ரூ. 2,50,000/– ஆகும். எனவே, தற்போது தேவைப்படும் கூடுதல் செலவினம் ரூ.5,00,000/–த்திற்கு (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1285/2022/பி1)

**தீர்மானம் எண்.433**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–18</u>

உசிலம்பட்டி நகராட்சி புதிய பேருந்து நிலையம் கட்டிடம் கட்டுவதற்கு எதிராக சென்ன உயர்நிதமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கிற்கு திரு. வி.ஆஸ்டின் வழக்கறிஞர் உசிலம்பட்டி நகராட்சி அவர்கள் வழக்கு நடத்த கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் வழக்குரை கட்டணம் ரூ. 80,000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்டுள்ள வழக்கு விபரம்</u>

| | | |
|---|---|---|
| 1) | W.P.(MD) No. 11639/2023 | ரூ. 10,000 |
| 2) | W.P.(MD) No. 10106/2023 | ரூ. 10,000 |
| 3) | W.P.(MD) No. 10112/2023 | ரூ. 10,000 |
| 4). | W.P.(MD) No. 10640/2023 | ரூ. 10,000 |
| 5). | W.P.(MD) No. 10107/2023 | ரூ. 10,000 |
| 6). | W.P.(MD) No. 10641/2023 | ரூ. 10,000 |
| 7). | W.P.(MD) No. 10110/2023 | ரூ. 10,000 |
| 8). | W.P.(MD) No. 10642/2023 | ரூ. 10,000 |

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 193/2023/எப்.1)

**தீர்மானம் எண்.434**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–19</u>

உசிலம்பட்டி நகராட்சி பேருந்து நிலைய கடை குத்தகை உரிம எண். 119/82, திரு.அ.பாண்டித்துரை என்பவர் பெயரில் உள்ளது. நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் உயர்த்தப்பட்ட வாடகையில் 50% வாடகை செலுத்த உத்தரவு பெறப்பட்டுள்ளது. இவ்வலுவலக கடித எண். 1109/2017/அ1, நாள். 02.07.2021–இல் வாடகை செலுத்தக்கோரி கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி கடைக்கு 01.04.2017 முதல் 31.03.2023 வரை பழைய வாடகை ரூ. 16296/–ஐ நீக்கம் செய்துவிட்டு, உயர்த்தப்பட்ட வாடகை ரூ. 120445/– யினை கேட்பு எழுப்பி வசூல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 812/2023/அ1)

**தீர்மானம் எண்.435**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–20</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் 31 எண்ணம் கொசு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு M/s. தேவதர்ஷினி மேன்பவர் ஏஜென்சி நிறுவனம் மூலம் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கோள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்தகாலம் 31.05.2023 உடன் முடிவடைவதால் தற்போது டெங்கு, கொரோனா போன்ற நோய்கள் பரவாமல் தடுக்கவும், பெருகி வரும் குடியிருப்பின் அடிப்படையிலும், தென்மேற்கு பருவ மழையின் காரணமாகவும் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் கூடுதலாக 5 நபர்களை கொண்டு மொத்தம் 36 நபர்களைக் கொண்டு 01.06.2023 முதல் 31.12.2023 வரை ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதிய அடிப்படையில் (1 நபருக்கு ரூ.358/– வீதம்) M/s. தேவதர்ஷினி மேன்பவர் ஏஜென்சி மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 4.50/– பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 91/2015/எச்1)

**தீர்மானம் எண்.436**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–21</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான உ.வாடிப்பட்டி உரக்கிடங்கில் அதிக அளவில் தேக்கடைந்துள்ள கழிவுகளை ஹிட்டாச்சி இயந்திரம் மூலம் ஒதுக்க விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்கில் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. M/s Win Earth Movers, Madurai – Rs. 1800/ 1 Hour + ஓட்டுநர் படி ரூ. 1300/–
2. M/s Sri Kallagar Earth Movers, Madurai – ரூ.1600/ 1 Hour + ஓட்டுநர் படி –ரூ. 700/–
3. M/s Sivan Earth Movers, Madurai – ரூ.1700/ 1 Hour + ஓட்டுநர் படி –ரூ. 1100/–

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s Sri Kallagar Earth Movers, Madurai நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டபப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1.பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்

2.அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க எண் 1950/2021/எச்1)

**தீர்மானம் எண்.437**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

நகர்மன்ற தலைவர்
உசிலம்பட்டி நகராட்சி.